182—

கடசல் தொழில்

***8500—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள பழமைத் தொழிலான கடைசல் தொழிலைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் உள்ள பழமைத் தொழிலான மரக் கடைசல் தொழிலைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் உள்ள கடைசல் தொழில் புரிவோர்க்கு வாய்ப்பளிக்கும் தொழில் நோக்கில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் 10 (குறுந்தொழில்) தொழில் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவை தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்படி தொழில் கூடங்கள் அனைத்தும் 1989-ல் அந்தந்தத் தொழில் முனைவோர்களால் கிரயம் செய்யப்பட்டுவிட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சக்திவேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், எங்கள் குடும்பக் காவல் தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ் எழுத்தின் முதல் எழுத்தான அகரத்தையும் கடைசி எழுத்தான னகரத்தையும் சேர்த்து ஆயத் தேர்ந்த தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிகை மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது அம்பாசமுத்திரம் தொகுதி. அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் கடைசல் பொருட்கள் செய்கின்ற பழமையான தொழில் நடைபெறுகிறது. அந்தக் கடைசல் தொழிலை சுமார் 1,500 பேர் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மூலப் பொருட்களான யூகலிப்டஸ் மரங்களை புதுக்கோட்டையிலிருந்தும் அதற்குத் தேவையான கச்சாப் பொருட்களான அரக்கை மத்தியப்

2002 ஏப்ரல் 19]

பிரதேசத்திலுள்ள போட்டியாவிலிருந்தும் அவர்கள் பெற்று அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். ஒரு காலத்தில் அம்பாசமுத்திரம் பகுதியில் கடைசல் தொழில் தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்த தொழில் இன்று மிகவும் நலிவடைந்த ஒரு நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், அவர்களுக்கு ஏற்றமிகு வாழ்வு அளிக்கின்ற விதமாக அவர்களுக்கு மூலப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். வடநாட்டு சேட்டுகள், அவர்கள் செய்கின்ற அந்த அலங்காரப் பொருட்களையும், அவர்கள் செய்கின்ற மற்றப் பொருட்களையும்—கிராமத்தில் சொல்வார்களே தவிட்டு விலைக்கு என்று—அப்படித் தவிட்டு விலைக்கு வாங்குவதை நிறுத்துகின்ற வகையில் நமது அரசு மூலம் sales emporium மூலம் நேரடியாகக் கொள்முதல் செய்யவும், கிராமங்களில் இந்தக் கடைசல் தொழிலுக்கு மானியம் வழங்குவதைப்போல, அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் இன்று பிரதானமான தொழிலாக இருக்கின்ற அந்தக் கடைசல் தொழிலுக்கு மானியம் வழங்குவதற்கும் ஆவன செய்யவேண்டும். இன்று குடிசைத் தொழிலில் Third Grade என்ற முறையில் பதிவு செய்யப்பட்டு, அந்தத் தொழிலுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றே கால் வீதம் மின்சாரக் கட்டணம் வசூலிப்பதைப் போல, அந்தத் தொழிலுக்கும், வீடுகளுக்கு வசூலிப்பதைப் போல மின் கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். சக்திவேல் முருகன்: இப்படி அவர்களுக்குப் பல்வேறு வகைகளிலே—அந்தத் தொழிலை, மரக் கடைசல் தொழிலை, பழமை வாய்ந்த அந்தத் தொழிலை, அம்பாசமுத்திரம் என்று சொன்னாலே மரக் கடைசல் தொழிலுக்குப் பெயர் போனது —இன்று அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் அதிகப்படியான விலைக்கு மூலப்பொருட்களை வாங்கி அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் மிகவும் நலிந்து, இப்போது தொழில் நலிந்துபோய் இருக்கிறது. எனவே, இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு, அந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு, அந்தத் தொழிலுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு மேற்கண்ட வகையிலே—இந்த அரசு நம்முடைய அம்மாவினுடைய அரசு—முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள பழமையான தொழிலான மரக் கடைசல் தொழிலைப் பாதுகாத்து அந்தப் பகுதியில் மேற்படி தொழில் புரிவோருக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் 1981 ஆம் ஆண்டு 10 குறுந்தொழில் தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்தொழிற்கூடங்கள் அனைத்தும் 1989-ல் அந்தந்தத் தொழில் முனைவோர்களால் கிரயம் செய்யப்பட்டுவிட்டன. மரக் கடசல் தொழில் புரிவோருடைய தேவைகளைக் கேட்டறிவதற்காக 1998 மற்றும் 2000 ஆண்டுகளில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மாவட்ட ஊரகத் தொழில் திட்டங்கள், திருநெல்வேலி திட்டத்தின்கீழ் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. கருத்தரங்குகளின் வெளிப்பாடுகள் நபார்ட் வங்கியின் பரிசீலனையில் உள்ளன. மரக் கடைசல் தொழில் புரிவோருக்கு மாவட்ட தொழில் மையம் வழியாக குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு குறைந்த மின் கட்டணச் சலுகை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மரக் கடசல் தொழில் புரிய பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற விண்ணப்பம் செய்பவர்கள் கடன் பெறுவதற்காக அவை வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகின்றன. மேலும் டாக்டர் புரட்சித் தலைவி தலைமையிலே அமைந்துள்ள தமிழக அரசு சிறு மற்றும் குறுந்தொழில் புரிவோருக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அத்தொழில்கள் நலிவடையாமல் இருக்க அனைத்துப் பாதுகாப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 183, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

183—

கால்நடை மருந்தகம்

***8849—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—